**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

23-10-2010

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்
## இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!
## இறைச்சி ஏற்றுமதிக்குக் கடைவிரிக்கும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டிக்கிறோம்..

சமீபத்தில் மத்திய அரசு சௌதிஅரேபியா, துபாய் ஆகிய நாடுகளுக்கு இறைச்சி, தோல் ஏற்றுமதிக்காக வளர்க்கப்படும் எருது கன்றுக்குட்டிகளுக்காக ஒரு கோடி ரூபாய் நிதியை வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கவும், இறைச்சி ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு 25% வட்டி சலுகையில் கடன் அளிக்கவும் இருப்பதாக அறிவித்துள்ளது. இதனை இந்து முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

எப்படி பெண் சிசுக் கொலை - ஒரு தலைமுறையை அழிக்கும் முயற்சியோ, அது ஒழிக்கப்படவேண்டுமோ அதுபோல இதுவும் ஒரு பயங்கர சதித் திட்டம். பணக்கார நாடுகள் வாழ, வளரும் நாடான பாரதத்தைச் சுடுகாடாக ஆக்க நடக்கும் சதி என்று எச்சரிக்கிறோம். எருதுகளை அழித்தால் நாளை கால்நடைகள் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். புலிகளை வளர்க்க, பாதுகாக்க கோடிக்கணக்கில் ஒதுக்கீடு செய்வது ஒருபுறம் கால்நடைகளை அழிக்க இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவது ஒருபுறம். என்ன முரண்பாடான அரசின் கொள்கை!

விதை நெல்லை அழிக்க மேற்கத்திய நாடுகள் செய்யும் சதிபோல, கால்நடைகளை அழித்து விவசாயம் இற்றுப்போக வைக்கவே இது நடப்பதாகக் குற்றம் சாட்டுகிறோம். விவசாயமே நமது நாட்டின் ஜீவநாடி! விவசாயம் அழிந்தால், பாரதம் பிச்சைப் பாத்திரம் ஏந்தி தெருவிற்கு வந்துவிடும்! இன்றும் 80% மக்கள் விவசாயத்தையும் அதனைச் சார்ந்த தொழில்களையும் நம்பியே வாழ்கிறார்கள். இதனை அழிக்கவே நடக்கும் சதி இது!

சமீபத்தில் புளியந்தோப்பு ஆடுதொட்டி நவீன கொலைக் களம் அமைக்கும் பணியைத் தமிழக அரசு விரைந்து செய்து வருகிறது. இந்தக் கொலைக்களத்தில் மட்டுமே ஒரு மாதத்திற்கு 50,000 மாடுகள் அறுக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது. ஒரு கொலைக்களத்தில் மட்டும் ஒரு வருடத்திற்கு 6 லட்சம் மாடுகள் என்றால் நாடு முழுவதும் இதன் எண்ணிக்கை என்ன என்பதைக் கணக்கு போட்டுப் பாருங்கள். இனி வருங்காலத்தில் மாடுகளே நமது நாட்டில் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

நமது விவசாய விளைப்பொருட்களை ரசாயன உரம், பூச்சுக்கொல்லி மருந்து எனக் காரணம் காட்டி வெளிநாடுகள் அதிக அளவில் வாங்குவது இல்லை. இன்று நமது நாடு மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னேறி வருகிறது. இந்நிலையில் கால்நடைகள் அழிப்புக்கு மத்திய, மாநில அரசுகள் கடை விரிப்பது கண்டிக்கத்தக்கது.

இத்தகைய தேசவிரோத செயலுக்குப் பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகளும், டிராக்டர் முதலான விவசாயக் கருவிகள் தயாரிக்கும் கம்பெனிகளும் பெருமளவில் அரசையும், அரசியல்வாதிகளையும் லஞ்ச முறைகேட்டால் தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு இந்தக் கொடூரச் செயலைச் செய்ய வைப்பதாக மக்கள் சந்தேகிக்கிறார்கள்.

இன்றும் நமது நாட்டில் வண்டி இழுக்கவும், விவசாயத்திற்கும், விவசாய உரத்திற்கும் எருதுகளே பெரிதும் பயன்படுகின்றன. எருதுகளை அழித்தால், மக்கள் பெட்ரோல் வண்டிகளையும், மோட்டார்களையும் நம்பியிருக்க வேண்டி வரும், இதனால் லாபம் கொழிக்கும் என கணக்கிடுகிறார்கள் சதிகாரர்கள்!

மகாத்மா காந்தி விவசாயத்திற்கும், கிராம முன்னேற்றத்திற்கும், பசு முதலான கால்நடை வளர்ச்சிக்கும் சுதந்திர பாரதத்தில் முன்னுரிமை தர வேண்டும் என்று கூறினார். இன்று ஈவு இரக்கமற்ற போக்கில் மாமிச ஏற்றுமதிக்காக பசு இனம் கொல்லப்பட அரசே நிதி உதவி செய்கிறது. தோலும், மாமிச ஏற்றுமதியும் மத்திய, மாநில அரசால் ஊக்கப்படுகின்றன. இவர்கள் மகாத்மாவின் கொள்கைக்கு எதிரானவர்கள்.

பொதுமக்களிடையே இதன் பேராபத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, மத்திய மாநில அரசுகள் மாடுகளைக் கொல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதனை வலியுறுத்த பிராணி நல வாரியம், பிராணி மித்ரா சங்கம், பியூப்பில்ஸ் ஃபார் அனிமல், பிராணி வதைத் தடுப்புச் சங்கம், அகிம்சை பரப்பிட, பாதுகாத்திட பாடுபட்டு வரும் ஜெயின் சமூகத்தினர், மகாத்மாவின் கொள்கைக்காக நிறுவப்பட்ட காதி கிராமோத்யோபவன், விவசாய சங்கங்கள் போன்ற அனைத்து அமைப்புகளும் ஒன்று திரண்டு போராட முன்வரவேண்டும்.

மத்திய மாநில அரசின் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கைவிட பெரும் போராட்டம் நடத்திடுவோம் வாருங்கள். கிராமப் பொருளாதாரமே, பாரதத்தின் உண்மையான வளர்ச்சி! இதனை மீட்க தேச பக்தர்கள் ஒன்றுதிரண்டு போராடுவோம் வாருங்கள் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**